

# பிரதோஷ வரலாறு

புண்ணிய ஸ்தலமான காசி மாநகரில் சிவலிங்கம் ஒன்றை பிரதிஷ்டை செய்து "பார்க்கவர்" என்னும் முனிவர் வழிபாடு செய்து வந்தார், இவர் "பிருகு" முனிவரின் மகன் சிவதரிசனத்தை காண முடியாமையால் மனம் வருந்தினார். ஆனால் தன் முயற்சியில் பின்னடையாமல் தவத்தை மேற்கொண்டார். முனிவரின் கடும் தவத்தை மெச்சி சிவபெருமான் தரிசனம் அளித்தார்.

தரிசனம் அளித்த சிவபெருமானை தனக்கு "மிருத சஞ்சீவினி" மந்திரத்தை உபதேசிக்கும்படி வேண்டினார் முனிவர். "மிருத சஞ்சீவினி" மந்திரம் என்பது இறந்தவர்களை உயிர்பெற்று எழ வைப்பது. இவ்வளவு சக்தியுள்ள மந்திரத்தை சிவபெருமானிடமிருந்து உபதேசமாக பெற்றார் பார்க்கவர்.

பார்க்கவரைத் தான் நாம் சுக்கிரன் என அழைக்கிறோம். இனி சுக்கிரன் என்னும் பெயரிலேயே பார்க்கவ முனிவரை அழைப்போம்.

இக்காலகட்டத்தில் தேவலோகத்தில் அசுரர்களுக்கும், தேவர்களுக்கும் இடையே போர் மூண்டது. தங்களது ஆட்சியே தேவலோகத்தில் இருக்க வேண்டும் என தேவர்களும், அசுரர்களும் சண்டையிட்டனர். இத்தீவிரச் சண்டை பல நாட்கள் தொடர்ந்தது. தேவர்கள் பலத்தில் ஓங்கி நின்றதால் அசுரர்கள் பலர் மாண்டனர். தங்களது வீழ்ச்சி நாளுக்கு நாள் பெருகுவதை உணர்ந்த அசுரர்கள் தக்க வழி ஒன்றைத் தேடினர்.

"மிருத சஞ்சீவினி" மந்திரத்தை அறிந்த சுக்கிரனை அசுரசேனை தனது குருவாக ஏற்றுக் கொண்டது. அசுரர்கள் தலைமையை ஏற்ற சுக்கிரன் அசுரர்களின் வீழ்ச்சியை கண்டு பொறுக்காதவராக ஆனார்.

தான் சிவபெருமானிடமிருந்து பெற்ற "மிருத சஞ்சீவினி" மந்திரத்தைக் கொண்டு போரில் மாண்ட அசுரர்களை உயிர் பிழைக்க வைத்தார். இதனால் அசுரர்களின் பலம் அதிகமானது. அவர்கள் புதிய பலத்துடன் போரிட்டனர்.

அசுரர்களின் புதிய பலத்தை அறிந்த தேவர்கள் பயம் கொண்டனர். தேவர்களின் வீழ்ச்சியைத் தடுக்க தக்க வழி ஒன்றினைக் கண்டனர். தேவர்களின் தலைவரான "பிரகஸ்பதி" யிடம் அதைக் கூறினர். தேவர்கள் எவருக்கும் இறந்தவர்களை பிழைக்க வைக்கும் "மிருத சஞ்சீவினி" மந்திரம் தெரியாததால் பிரகஸ்பதியின் மகனான "கசன்" என்பவனை அழைத்து, அசுரர்களின் தலைவனான சுக்கிரனிடம் சென்று "மிருத சஞ்சீவினி" மந்திரத்தை கற்றுவரும்படி கூறினர்.

கசன் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சுக்கிரனிடம் மந்திரத்தை கற்றுவரச் சென்றான். சுக்கிரனுக்கு "தேவயானி" என்னும் மகள் ஒருத்தி இருந்தாள், பேரழகியான அவளைத் தனது சாமர்த்தியத்தால் உள்ளம் கவர்ந்தான் கசன். தேவயானியின் மனதில் இடம் பிடித்த கசன் தேவயானியின் துணையால் சுக்கிரனின் மாணாக்கனாகவும் ஆனான். கசன் தேவர்களின் சார்பாக வந்துள்ளான் என்பதை அறிந்த அசுரர்கள் அவனைக் கொல்லத் திட்டமிட்டனர்.

பலமுறைகளில் கசனை கொலை செய்தும் தேவயானி தன் தந்தை மூலம் கசனை உயிர்ப்பித்தாள். தங்களது முயற்சி தோல்வியடைவதைக் கண்ட அசுரர்கள் ஒருமுறை கசனை கொன்று தீயிலிட்டு சாம்பலாக்கி பானத்தில் கரைத்து தலைவனான சுக்கிரனுக்கு கொடுத்து விட்டனர். இம்முறையும் தனது காதலனான கசனை உயிர்ப்பிக்க வேண்டினாள் தேவயானி.

தன் வயிற்றில் கசன் இருப்பதை அறிந்த சுக்கிரன், கசன் உயிர் பெற்றால், தான் உயிர் துறக்க வேண்டும் என்பதை அறிந்தார். ஆகவே தன் வயிற்றினுள் உள்ள கசனுக்கு "மிருத சஞ்சீவினி" மந்திரத்தை உபதேசித்தார். பிறகு சுக்கிரனின் வயிற்றைப் பிளந்து கொண்டு கசன் வெளிவந்தான். தான் கற்ற "மிருத சஞ்சீவினி" மந்திரத்தால் சுக்கிரனைப் பிழைக்க வைத்தான்.

பின்னர் கசன் இறந்த தேவர்களை உயிர்ப்பிக்க ஆரம்பித்தான்.

இதனால் இரு பக்கமும் சமபலம் உண்டாகியது. போரும் தொடர்ந்தது. "மிருத சஞ்சீவினி" மந்திரத்தை விட அமுதம் உண்டால் மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம் என்பதை அறிந்த தேவர்கள், பாற்கடலினைக் கடைந்து அமுதம் எடுக்கத் தொடங்கினர். அசுரர்களும் அதில் சேர்ந்து கொண்டனர்.

மந்திரமலையை மத்தாகவும், நாகங்களுள் ஒன்றான வாசுகியை கயிறாகவும், ஒருபுறம் தேவர்களும் மற்றொரு புறம் அசுரர்களும் பாம்பின் தலை வாலைப் பிடித்தபடி பாற்கடலை கடைந்தனர். கடையத் தொடங்கிய சில நாட்களில் வாசுகியின் உடல் தேய்ந்து அதனுள் உள்ள கொடிய நஞ்சினை வெளிப்படுத்தியது.

ஆலகாலவிஷமான நஞ்சு வெளிப்பட உலகம் இருண்டது. நஞ்சால் பலருக்கு உடலானது நீலமாகியது.

அச்சமுற்ற தேவர்கள் உடன் பிரம்ம தேவனை அழைத்துக் கொண்டு இந்திரனின் இடத்திற்குச் சென்றனர். ஆனால் இந்திரலோகமே விஷமண்டலத்தில் மூழ்கியிருந்ததால் அப்பிரதட்சிணமாகச் சுற்றியபடி வலம் வந்து இந்திரனைக் கண்டனர். (இதனால் தான் பிரதோஷ வழிபாட்டில் "சோமசுந்த பிரதட்சணம்" என்று அப்பிரதட்சணமுறை பின்பற்றப்படுகிறது). இந்திரன் எல்லோரையும் அமைதிப்படுத்தி "அமுதம் வேண்டும் என்ற ஆசையால் நாம் பாற்கடலை கடையும் முன்னர் முக்கண்ணனான சிவபெருமானை கலந்து ஆலோசிக்காமலும் ஸ்துதிக்காமலும் காரியத்தைத் தொடங்கி விட்டோம். இத்தவற்றால் தான் இப்போது கஷ்டப்படுகிறோம். ஆகையால் அனைவரும் சிவபெருமானை அணுகி நம்மை காப்பாற்ற வேண்டுவோம்" என்றார்.

பின்னர், தேவர்கள், பிரம்மா எல்லோரும் திருக்கயிலாயம் சென்றனர். அங்கு நுழைவாயிலில் நின்ற நந்திதேவரை வழிபட்டனர். (இதனால் தான் சிவபெருமானை பிரதோஷ தினத்தில் வழிபடுவதற்கு முன் நந்திதேவரை வணங்குகிறோம்). பாற்கடலைக் கடைந்ததையும், விஷம் வெளிவந்ததையும் கூறி சிவனிடம் தங்களை காப்பாற்ற கோரியும் வந்துள்ள விபரத்தைக் கூறினர்.



நந்திதேவரும் சிவபெருமானிடம் தேவர்கள், இந்திரன், பிரம்மா ஆகியோரது வருகையையும் நடந்தவற்றையும் கூறினர். பின்னர், பிரம்மா முதலிய எல்லோரும் சிவபெருமானை தரிசித்துத் தங்களைக் காக்கும்படி வேண்டினர்.

அடியார்களின் குறைகளை நீக்கி அருளும் பகவானும், காக்க சித்தம் கொண்டு தன் அருகே பணி செய்து கொண்டிருந்த சுந்தரரை நோக்கி ஆலகால விஷத்தைக் கொண்டுவரும்படி ஆணையிட்டார். அடியவரான சுந்தரர் கட்டளையை ஏற்று வாசுகியாகிய பாம்பின் விஷத்தை (ஆலகால விஷம்) நாவற்கனி வடிவில் திரட்டி எடுத்துக் கொண்டு வந்து பரமேச்வரனிடம் கொடுத்தார்.

ஆலகால விஷத்தைக் கையில் வாங்கி ஈஸ்வரன் அருந்தினார். உடன் அருகிலிருந்து பார்வதி தேவி ஆலகால விஷம் கழுத்திற்கு கீழ் செல்லாதவாறு தன் திருக்கையால் மெல்ல அழுத்தினார். அம்பிகையின் திருக்கரம் பட்டவுடன் ஈஸ்வரனின் கழுத்தில் விஷம் நிறம் மாறியது. நீல நிறத்தில் மாறி கழுத்தில் கறுப்பு மணி போல் நின்றது. இதனால் "திருநீலகண்டன்" என இறைவன் போற்றப்படுகிறார். நஞ்சை உண்டதால் "நஞ்சுண்டேச்சுவரன்" என்வும் அழைப்பதுண்டு.

தேவர்கள் மகிழ்வுற்று ஈசுவரனை வணங்கி பல்வேறாக துதித்தனர், போற்றினர். மகிழ்வுற்ற ஈஸ்வரனும் மீண்டும் பாற்கடலை கடையுமாறு தேவர்களுக்கு ஆணையிட்டார். தேவர்களும் வணங்கி ஈசுவரனைத் துதித்தபடி பாற்கடலை கடைந்தனர்.

திருப்பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து லட்சுமி, ஐராவதம் என்ற யானை (வெள்ளை நிறமுடையது), காமதேனு, கற்பகதரு, சிந்தாமணி, கௌஸ்துபமணி, சூடாமணி, உச்சைஸ்ரவம் என்ற குதிரை முதலியன ஒன்றன்பின் ஒன்றாக வந்தன.

இலக்குமியை திருமால் ஏற்க, மற்றவற்றை தேவர்கள் ஏற்றனர். தேவர்கள் பாற்கடலை கடைந்த தினம் ஏகாதசி. அதற்கு மறுதினம் துவாதசி ஆகும். துவாதசியன்று அதிகாலை அமிர்தம் தோன்றியது. தேவர்கள் அமிர்தத்தை பகிர்ந்து உண்டனர். பின் பலவாறாக சிவபெருமானை ஸ்துதி செய்தனர்.

எல்லாம் வல்ல சிவபெருமானும் தேவர்களின் அன்பால் மகிழ்ந்து பிரதோஷ வேளையில் தன் திருஉருமுன் நின்ற நந்தி தேவரின் இரு கொம்புகளுக்கு இடையில் நின்று அம்பிகை காணுமாறு திரு நடனம் செய்தார். தேவர்களும், அம்பிகையும் சிவபெருமானையும் வணங்கினர். அது முதல் திரயோதசி திதியன்று மாலை நேரம் 4.30 முதல் 7.00 மணி வரை பிரதோஷ காலமாயிற்று.

சிவபெருமானுக்கு மட்டுமே உகந்த இப்பண்டிகை அனைத்துலக ஜீவராசிகளும், தேவர்கள், விஷ்ணு, பிரம்மா என அனைவராலும் ஒன்று சேர்ந்து விரதம் இருந்த பண்டிகை என்ற பெருமைக்குரியது.

எனவே உபவாசம் இருந்து பிரதோஷ காலத்தில் சிவபெருமானை பூஜிப்பவர்கள் சகலஸௌபாக்யங்களையும், ஆரோக்யத்தையும், பெற்று இம்மையிலும் மறுமையிலும் நலமுடன் வாழ்வர் என்பது திண்ணம். நாமும் விரதம் இருந்து இப்பிரதோஷ வழிபாட்டினை மேற்கொண்டு எல்லா நலனையும் பெறுவோமாக.





# நந்திதேவர் வழிபாடு

சிவபெருமானுக்கு "ருத்ரன்" என்னும் பெயருண்டு. ருத்ரன் என்பதற்கு பொருள் "துக்கத்தை விரட்டுபவன்" என்பது. "ருஹ" என்றால் துக்கம், "த்ரன்" என்றால் ஓட்டுபவன். "ருத்ரன்" என்னும் திருநாமம் நந்திகேஸ்வரருக்கும் உரியதாகும்.

ஆகையால், பிரதோஷ காலத்தில் சிவபெருமானை வழிபடுவதற்கு முன்னர் துக்கத்தைப் போக்குபவராய் விளங்கும் நந்திகேஸ்வரரை வழிபட வேண்டும்.

தேவர்கள், தங்கள் குறைகளைக் களைய சிவபெருமானை அணுகும் முன் நந்திகேஸ்வரரை அணுகினர். அதைப் போன்று நாமும் சிவபெருமானை வழிபடும் முன் நந்திகேஸ்வரரை வழிபடுதல் அவசியமாகும்.

நந்திகேஸ்வரரை வழிபடும் போது அருகம்புல்லால் ஆன மாலையை நந்திதேவருக்கு அணிவித்தும், நெய்யால் விளக்கேற்றியும் வழிபடுதல் நல்லது. வில்வத்தால் நந்திதேவரை அலங்கரித்து அர்சித்தால் பெரும் நன்மைகளை பெறலாம். இத்துடன் சிவப்பு அரிசியில் வெல்லம் கலந்து நந்திதேவருக்கு நிவேதனம் செய்யலாம்.




# சிவாஷ்டோத்தர சத நாமாவளி:

ஓம் சிவாய நம:
ஓம் மஹேச்வராய நம:
ஓம் சம்பவே நம:
ஓம் பிநாகினே நம:
ஓம் சசிசேகராய நம:
ஓம் வாமதேவாய நம:
ஓம் விரூபாக்ஷாய நம:
ஓம் கபர்த்தினே நம:
ஓம் நீலலோஹிதாய நம:
ஓம் சங்கராய நம:
ஓம் சூலபாணயே நம:
ஓம் கட்வாங்கினே நம:
ஓம் விஷ்ணுவல்லபாய நம:
ஓம் சிபிவிஷ்டாய நம:
ஓம் அம்பிகாநாதாய நம:
ஓம் ஸ்ரீகண்டாய நம:
ஓம் பக்தவத்ஸலாய நம:
ஓம் பவாய நம:
ஓம் சர்வாய நம:
ஓம் த்ரிலோகேசாய நம:
ஓம் சிதிகண்டாய நம:
ஓம் சிவாப்ரியாய நம:
ஓம் உக்ராய நம:
ஓம் கபாலினே நம:
ஓம் காமாரயே நம:
ஓம் அந்தகாஸுரஸூதனாய நம:
ஓம் கங்காதராய நம:
ஓம் லலாடாக்ஷாய நம:
ஓம் காலகாலாய நம:
ஓம் க்ருபாநிதயே நம:
ஓம் பீமாய நம:
ஓம் பரசுஹஸ்தாய நம:
ஓம் ம்ருகபாணயே நம:
ஓம் ஜடாதராய நம:
ஓம் கைலாஸவாஸினே நம:
ஓம் கவசினே நம:
ஓம் கடோராய நம:
ஓம் த்ரிபுராந்தகாய நம:
ஓம் வ்ருஷாங்காய நம:
ஓம் வ்ருஷபாரூடாய நம:
ஓம் பஸ்மோத்தூலித-விக்ரஹாய நம:
ஓம் ஸாமப்ரியாய நம:
ஓம் ஸ்வரமயாய நம:
ஓம் த்ரயீமூர்த்தயே நம:
ஓம் அநீச்வராய நம:
ஓம் ஸர்வஜ்ஞாய நம:
ஓம் பரமாத்மனே நம:
ஓம் ஸோமஸூர்யாக்னி-லோசனாய நம:
ஓம் ஹவிஷே நம:
ஓம் யஜ்ஞமயாய நம:
ஓம் ஸோமாய நம:
ஓம் பஞ்சவக்த்ராய நம:
ஓம் ஸதாசிவாய நம:
ஓம் விச்வேச்வராய நம:
ஓம் வீரபத்ராய நம:
ஓம் கணநாதாய நம:
ஓம் ப்ரஜாபதயே நம:
ஓம் ஹிரண்யரேதஸே நம:
ஓம் துர்த்தர்ஷாய நம:
ஓம் கிரீசாய நம:
ஓம் கிரிசாய நம:
ஓம் அநகாய நம:



ஓம் புஜங்கபூஷணாய நம:
ஓம் பர்க்காய நம:
ஓம் கிரிதன்வனே நம:
ஓம் கிரிப்ரியாய நம:
ஓம் க்ருத்திவாஸஸே நம:
ஓம் புராராதயே நம:
ஓம் பகவதே நம:
ஓம் ப்ரமதாதிபாய நம:
ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நம:
ஓம் ஸூக்ஷமதனவே நம:
ஓம் ஜகத்வ்யாபினே நம:
ஓம் ஜகத்குரவே நம:
ஓம் வ்யோமகேசாய நம:
ஓம் மஹாஸேனஜனகாய நம:
ஓம் சாருவிக்ரமாய நம:
ஓம் ருத்ராய நம:
ஓம் பூதபதயே நம:
ஓம் ஸ்தாணவே நம:
ஓம் அஹயே புத்ன்யாய நம:
ஓம் திகம்பராய நம:
ஓம் அஷ்டமூர்த்தயே நம:
ஓம் அநேகாத்மனே நம:
ஓம் ஸாத்விகாய நம:
ஓம் சுத்தவிக்ரஹாய நம:
ஓம் சாச்வதாய நம:
ஓம் கண்டபரசவே நம:
ஓம் அஜாய நம:
ஓம் பாசவிமோசகாய நம:
ஓம் ம்ருடாய நம:
ஓம் பசுபதயே நம:
ஓம் தேவாய நம:
ஓம் மஹாதேவாய நம:
ஓம் அவ்யயாய நம:
ஓம் ஹரயே நம:
ஓம் பகநேத்ரபிதே நம:
ஓம் அவ்யக்தாய நம:
ஓம் தக்ஷாத்வரஹராய நம:
ஓம் ஹராய நம:
ஓம் பூஷதந்தபிதே நம:
ஓம் அவ்யக்ராய நம:
ஓம் ஸஹஸ்ராக்ஷாய நம:
ஓம் ஸஹஸ்ரபதே நம:
ஓம் அபவர்க்கப்ரதாய நம:
ஓம் அனந்தாய நம:
ஓம் தாரகாய நம:
ஓம் பரமேச்வராய நம:



# நந்திதேவர் அஷ்டோத்ர சதநாமாவளி

ஓம் நந்திகேசாய நம :
ஓம் ப்ரஹ்மரூபிணே நம :
ஓம் சிவத்யான நம :
ஓம் பராயணாய நம :
ஓம் தீர்க்ஷ்ணேங்கேசாய நம :
ஓம் வேதபாகாய நம :
ஓம் விருபாய நம :
ஓம் விருஷயாய நம :
ஓம் துங்கசைலாய நம :
ஓம் தேவதேவாய நம : 10
ஓம் சிவப்ரயாய நம :
ஓம் விராஜமாநாய நம :
ஓம் நடநாய நம :
ஓம் அக்னிருபாய நம :
ஓம் தனப்பிரியாய நம :
ஓம் நிதீசாய நம :
ஓம் சிவவாகனாய நம :
ஓம் குளப்ரியாய நம :
ஓம் சாருஹாஸாய நம :
ஓம் ச்ருங்கிணே நம :20
ஓம் நவத்ருணப்ரியாய நம :
ஓம் வேதஸாராய நம :
ஓம் மந்த்ரஸாராய நம :
ஓம் ப்ரத்யக்ஷாய நம :
ஓம் கருணாகராய நம :
ஓம் ஸ்ரீகராய நம :
ஓம் லலாமகலிகாய நம :
ஓம் சிவயோகிநே நம :
ஓம் ஜலாதிபாய நம :
ஓம் சிதசாமரதாரிணே நம : 30
ஓம் வேதாங்காய நம :
ஓம் கநகப்ரியாய நம :
ஓம் கைலாச வாஸிநே நம :
ஓம் தேவாய நம :
ஓம் ஸ்தித பாதாய நம :
ஓம் ஸ்துதிப் பிரியாய நம :
ஓம் ச்வேதோபவவீதிநே நம :
ஓம் நாட்யநந்தகாய நம :
ஓம் கிங்கிணிதாராய நம :
ஓம் மத்தச்ருங்கிணே நம : 40
ஓம் ஹாடகேசாய நம :
ஓம் ஹேமபூஷணாய நம :
ஓம் விஷ்ணுருபிணே நம :
ஓம் ப்ருத்வீ ருபிணே நம :
ஓம் மதுவாய நம :
ஓம் காமிகப்ரியாய நம :
ஓம் விசிஷ்டாய நம :
ஓம் திவ்ய ரூபாய நம :
ஓம் உஜ்வலினே நம :
ஓம் ஜ்வலநேந்த்ராய நம : 50
ஓம் ஸம்வந்தாய நம :
ஓம் காலாய நம :
ஓம் கேசவாய நம :
ஓம் ஸர்வதைவதாய நம :
ஓம் ச்வேதவர்ணாய நம :
ஓம் சிவாஸிநாய நம :
ஓம் சிந்மயாய நம :
ஓம் ச்ருங்கபட்டாய நம :



ஓம் சாருருபாய நம
ஓம் வருக்ஷேசாய நம : 60
ஓம் ஸோமசூர்யாகனி
லோசனாய நம :
ஓம் கந்தராய நம :
ஓம் ஸோம்பூஷாய நம :
ஓம் ஸிவக்தராய நம :
ஓம் கலிநாசநாய நம :
ஓம் ஸுப்ரகாசாய நம :
ஓம் மஹாவீர்யாய நம :
ஓம் ஹம்ஸாய நம :
ஓம் அக்னிமயாய நம :
ஓம் ப்ரபவே நம : 70
ஓம் வரதாய நம :
ஓம் ருத்ரரூபாய நம :
ஓம் காலகண்டாய நம :
ஓம் கைலாசினே நம :
ஓம் சிவாதனஸ் நந்தநாய நம :
ஓம் காரணாய நம :
ஓம் ஸ்துதிபக்தாய நம :
ஓம் வீரகண்டாய நம :
ஓம் கந்தாய நம :
ஓம் விஷ்ணு நந்திநே நம : 80
ஓம் சிவஜ்ஜூலாக்ராஹிணே நம :
ஓம் பத்ராய நம :
ஓம் அநகாய நம :
ஓம் வீராய நம :
ஓம் த்ருவாய நம :
ஓம் தாத்ரே நம :
ஓம் சாச்வதாய நம :
ஓம் ப்ரிதோஷப்ரியாய நம :
ஓம் குண்டலக்ருதே நம :
ஓம் ச்வேதாசாமரபூஷாய நம : 90
ஓம் தேவராஜாய நம :
ஓம் ப்ரபாநந்திநே நம :
ஓம் படிதாய நம :
ஓம் பரமேச்வராய நம :
ஓம் நிருபாய நம :
ஓம் நிராகாராய நம :
ஓம் சின்னதைத்யாய நம :
ஓம் நாஸாஸீத்ரிணே நம :
ஓம் அனந்தேசாய நம :
ஓம் திலதண்டுலபக்ஷணாய நம :100
ஓம் வாரநந்திணே நம :
ஓம் ஸரஸாய நம :
ஓம் விமலாய நம :
ஓம் பட்டஸூத்ராய நம :
ஓம் ஸிதவர்ணஸ்வருபிணே நம :
ஓம் பீமாய நம :
ஓம் ஸர்வாத்மநே நம :
ஓம் ஸர்துவிக்யாதாய நம :108

சுபம்



உ

## சோமசூக்தப் பிரதக்ஷிணம்

பிரதோஷ காலத்தில் மட்டுமே சோமசூக்த பிரதக்ஷிணம் மிகவும் விசேஷமானதாகும்.

ஆலகால விஷம், தேவர்களை பிரதக்ஷிணமாக சிவன் சந்நதிக்குப் போக விடாமல் தடுத்தது. அதனால் தேவர்கள், ஆலகால விஷத்திற்கு அஞ்சி இறைவனை சரணம் அடைந்தால் போதும் என்ற நிலையில் அப்ரதக்ஷிணமாகவே அங்குமிங்குமாக அலைந்து சிவன் சந்நிதிக்குச் சென்று தரிசித்தார்கள். இவ்வாறு தேவர்கள் வலமும் இடமுமாக ஓடிவந்த நிலையைத்தான் சோம சூக்த பிரதக்ஷிணம் என்கின்றனர்.

முதலில் நந்திதேவரையும் சிவபெருமானையும் வழிபட வேண்டும்.

அடுத்து அப்பிரதக்ஷிணமாக சண்டிகேசுவரர் சந்நிதி வரைச் சென்று அவரைத் தரிசித்து அப்படியே திரும்பி வந்து முன் போல் நந்திதேவரையும், சிவனையும் தரிசிக்க வேண்டும்.

அடுத்து வழக்கம் போல் பிரதக்ஷிணமாக அபிஷேக தீர்த்தம் விழும் கோமுகி வரை வரவேண்டும். கோமுகியைக் கடக்காமல், வந்த வழியே திரும்பி பிரதக்ஷிணமாக சென்று நந்தியையும், சிவனையும் தரிசிக்க வேண்டும்.

இங்ஙனம் மூன்று முறை பிரதக்ஷிணம் செய்ய வேண்டும். இவ்வாறு பிரதக்ஷிணம் செய்வதால், அநேக அசுவமேதயாகம் செய்த பலன் கிட்டும் என்று கூறப்படுகிறது.



## பிரதட்சனை விளக்கப் படம்

